மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28ஆம் நாள் வியாழக் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 202/2015 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | நதியா | வயது | .. | 33 |
| க/பெ. | .. | முருகன் | சாதி | .. | |
| கிராமம் | .. | வெல்லூர் | சமயம் | .. | |
| தாலுக்கா | .. | போளூர் | தொழில் | .. | கூலிவேலை |

28.10.2021 - வா.சா.1 முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் 2ஆம் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். வாதி தரப்பில் 04.03.1977 தேதியிட்டு ஒரு வெள்ளச்சியம்மாள் என்பவர் கிரையம் பெற்ற கிரையப் பத்திர உண்மை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 28.05.2015 தேதியிட்ட நில உரிமை சிட்டா பட்டா எண்.76 வா.சா.ஆ.2, 28.05.2015 தேதியிட்ட நில உரிமை சிட்ட பட்டா எண்.487 வா.சா.ஆ.3, 27.05.2015 தேதியிட்டு இலுப்பகுணம் குரூப் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட அடங்கல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.